முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் சோமாசிமாற நாயனார் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

15.12.2018, சனிக்கிழமை

**1. கந்தவேலன் மகா சக்தியாக**
**கலி மீட்பின் குருவாக வந்தநல்**
**செந்தூரானின் ஒளி சூட்சுமமே**
**சிவ பரமானந்த ராஜ ரிஷியே**

2. அரசனே அரங்கனே முருகனே
அகிலமதில் உன் பெருமை கூறி
தரணியிலே ஒளி சூட்சும நூலை
தாமுரைப்பேன் **விளம்பி தேளின் திங்கள்**

**3. திங்களிலே எழுநான்கோர் திகதி காரி வாரம்**
**(விளம்பி வருடம் கார்த்திகை மாதம் 29ம் நாள் 15.12.2018, சனிக்கிழமை)**
**தேசிகனுக்கு சோமாசி மாற நாயனாரும்**
ஓங்கார உலகம் அமைய உரைப்பேன்
உயர்வான சூழலை பாதுகாப்பை

4. பாதுகாப்பை அமைக்க வேண்டி
பாவபுண்ணிய வழிகள் தன்னை
பூதலத்தை வழிநடத்தும் சக்தியாக
பூவுலகத்தார்க்கு புரிதல் வைக்க

5. வைக்கவே சன்மார்க்க விதையிட்டு
வளர்க்கும் ஆறுமுக ஞானியின்
பக்குவம் அடையும் மக்கள்
பரோபகாரம் அடைந்த மக்கள்

6. மக்களிடை மலர்ச்சியாக வரும்
மாற்றம் தருமசிந்தை கொண்டே
தேக்கமிலா நல்பாதுகாப்பு தரும்
தேசிகன் கொள்கையைவிட உலகில்

7. உலகில் சிறந்த வழிமுறை இல்லை
உலகோர் ஏற்றுப் பணிந்து
ஞாலமதின் ஞானகுருவே என
நம்பி சரணடைவு காண

8. காணவே கலி தன் இடர்களை
கட்டாயம் விலக்கிக் கொண்டு
ஞானவான்களாக வாழும்
ஞானபூமிகளை தாக்கா விட்டு விட்டு

9. விட்டுமே பாதுகாப்பு தரும்
விளைவு பேரழிவு எனும் நிலை
திட்டமிட்ட சதி கலகம் சோடை
தேசமதில் இனி அணுகா வண்ணம்

10. வண்ணமுடன் சிறப்பு காணும்
வலிமையான தாக்கம் இல்லா
எண்ணம் தூய்மை பெருகிட
எங்கும் அமைதி மேன்மை கூடும்

11. கூடுமே ஆறுமுகன் தயவு
குறையிலா ஞான ஆட்சியாக
நாடெங்கும் பரவி மலரும்
நாட்டிய ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–